**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 680/2024**

**Prosecution witness : அ.சா. 7** **Date : 11.02.2026.**

| | |
|---|---|
| **Name : மாதுராஜ்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது காவல் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2024ம் வருடம் ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 27.08.2024-ம் தேதி ஜலகண்டாபுரம் காவல்நிலையத்தில் நான் நிலைய பொறுப்பில் இருந்த போது கிருஷ்ணன் மகன் மாதையன் என்பவர் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.146/2024 u/Sec. 296(பி), 308 (4), 324(2) BNS** ஆக வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 4** ஆகும்.

2. பிறகு நான் புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 27.08.2024 ம் தேதி மதியம் 12.00 மணிக்கு சம்பவ இடம் ஜலகண்டாபுரம் வாதி கடையிக்கு சென்று சாட்சிகள் அர்தனாரி மற்றும் பாலாஜி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். வரைபடம் **அ.சா.ஆ 5** ஆகும்.

3. பின்பு சாட்சிகள் அர்தனாரி, பாலாஜி, மாதையன், கண்ணன், நடராஜ், சீனிவாசன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் எதிரி கடந்த 29.08.2024 ம் தேதி கைது செய்யப்பட்டு தக்க வழிக்காவல் மூலமாக நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

4. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரி மீது கடந்த 30.08.2024ம் தேதி **நி.கு.எண்.146/2024 u/Sec. 296(பி), 308 (4), 324(2) BNS** ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

5. இந்த வழக்கின் புகார் இரண்டு நாட்கள் கால தாமதமாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். சம்பவம் நடந்த சமயத்தில் புகார்தாரர் எனக்கு கைபேசியில் தகவல் சொன்னதன் பேரில் நான் சம்பவம் இடம் சென்றனா என்றால் இல்லை. புகார்தாரர் அவருடைய நீதிமன்ற விசாரணையில் அவ்வாறு சொல்லியிருந்தால் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் அங்கு எத்தனை நபர்கள் இருந்ததாக எனது விசாரணையில் தெரிந்து கொண்டேன் என்றால் 4 நபர்கள் இருந்ததாக தெரிந்து கொண்டேன். அந்த 4 நபர்கள் என்ன என்றால் அ.சா.1. அ.சா.2. அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோர்கள் இருந்தார்கள்.

6. என்னுடைய விசாரணையில் அ.சா.5 ல் சீனிவாசன் என்பவர் சத்தம் கேட்டு தான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றும் சம்பவம் நேரடியாக தெரியாது என்றால் எனது விசாரணையில் சொல்லியுள்ளராக என்றால் அவ்வாறு இல்லை. சம்பவத்தின் போது எதிரி உடைத்தாக சொல்லப்படும் கடலை உருண்டை பாட்டில் மற்றும் பாட்டில்களை சேகரித்து நீதிமன்றத்தில் சான்று பொருள்களாக ஒப்படைத்தேனா என்றால் துப்புரவு பணியாளர்கள் சேதம் அடைந்த கண்ணாடி துகள்களை அப்புறப்படுத்தியதால் கைப்பற்ற முடியவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கடையை சுற்றி நிறைய கடைகள் உள்ளது என்றால் சரிதான்.

7. அந்த கடைகாரர்கள் யாரையும் இந்த வழக்கில் சாட்சியாக போடவில்லை என்றால் யாரும் சாட்சி சொல்ல முன்வராததால் அவர்களை சாட்சியாக போடவில்லை. இந்த வழக்கு சம்பவம் ஆனது புகார்தாரர் மற்றும் அவரது இரு மகன்களும் கடைக்கு உள்ளே இருந்தபோது தான் நடந்தது என்றால் சரிதான். கண்ணுற்ற மற்றும் மகஜர் சாட்சிகள் அனைவரும் புகார்தாரரின் நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் எதன் அடிப்படையில் எதிரி மீது

324(2) பி.என்.எஸ் பிரிவின் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் எதிரி புகார்தாரரின் கடையில் உள்ள பாட்டில்களை உடைத்து சேதப்படுத்தியதால் மேற்கண்ட பிரிவில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

8. சேதப்படுத்திய பொருட்களை கைப்பற்றாமலே எதிரி மீது தவறுதலாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி புகார்தாரரை கெட்ட வார்த்தையால் பேசவில்லை என்றும் உயிருக்கு அச்சுறுத்தும் வகையில் எதிரி செய்யவில்லை என்றால் சரியல்ல.புகார் தாரர் அவரது கடையில் பொருட்களை அதிகமான விலைக்கு விற்பதால் எதிரி அவரிடம் முறையிட்டதால் எதிரி மீது முன்விரோதம் கொண்டு தவறுதலாக புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. உண்மையில் புகார்தாரர் சொல்லும் விதத்தில் சம்பவம் நடைபெற்றிருந்தால் சம்பவம் நடைபெற்ற அன்றோ அல்லது அதற்கு மறுநாளோ புகார் அளித்திருப்பார்.

9. புகார் தாரர் சொல்லியது போல் சம்பவம் நடைபெறாத காரணத்தால் தான் சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் கழித்து புகார் அளித்தார் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் சொல்லும் விதத்தில் சம்பவம் நடைபெற்றிருந்தால் சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் உள்ள கடையின் உரிமையாளர்களை சாட்சிகளாக சேர்த்திருப்பேன் என்றால் சரியல்ல. புலன் விசாரணை ஒரு தலைபட்சமானது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.